தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4819/SCIC/2024**

திரு.V.பாண்டியராஜன் த/பெ.வேதமூர்த்தி - புகார்தாரர்
A-1, பிளாசா மேனர் பிளாட்
எண்.1, கருமாரியம்மன் கோயில் தெரு
வடபழனி, சென்னை - 600 026.
Phone:98402 31622

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை-600 008.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **04.07.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 05.08.2024 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 14.08.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 30.09.2024 |
| 5. | மனுதாரரின் புகார் மனு | 14.10.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 04/07/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், எழும்பூர், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Door No.2 & 2A, United India Colony, 1st Main Road, Kodambakkam, Chennai-24, comprisedin Old Paimash Nos.571, 572 and 573 and then T.S.No.14/2, Block No.32, புலியூர் (Village) Egmore, Nungambakkam Taluk, Chennai District என்கின்ற முகவரியில் உள்ள

கட்டிடத்திற்கு கடந்த 30/03/1994 அன்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமலாக்க பிரிவு வழங்கிய பணி நிறைவு சான்றிதழ் (Completition Certificate) நகலை தகவலாக வழங்கவும்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. V.பாண்டியராஜன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.ம.நிர்மலாதேவி, துணை திட்ட அமைப்பாளர், முதுநிலை திட்ட அமைப்பாளர் (பொ), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள் ஆஜராகி தமது அலுவலக ஆவணங்களின்படி பணி நிறைவு சான்றிதழ் (Completition Certificate) அளிக்கப்படவில்லை என்றும் அது குறித்தான பதில் மனுதாரருக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / துணை திட்ட அமைப்பாளர், முதுநிலை திட்ட அமைப்பாளர் (பொ) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள், இப்பொருண்மை தொடர்பாக பிரமாணப் பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை உரிய முகப்பு கடிதத்துடன் (Covering letter). மனுதாரருக்கு 31/08/2026-க்கு முன்னர் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன உத்தரவுடன் இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4819/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை-600 008.

**<u>புகார்தாரர்</u>**

திரு.V.பாண்டியராஜன் த/பெ.வேதமூர்த்தி
A-1, பிளாசா மேனர் பிளாட்
எண்.1, கருமாரியம்மன் கோயில் தெரு
வடபழனி, சென்னை - 600 026.
Phone:98402 31622

RG/Sr.PC